



# நகர் ஊரமைப்பு துறை

## விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு
## கட்டங்குடி ஊராட்சி

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒன்றியம், கட்டங்குடி ஊராட்சி, கட்
ச.எண்:161/1A1,1A2,1A3, 1A4, 1A5, 2A, 2B, 2C, 2
6B1,6B2,6B3,6B4,4B,5, 141/4A,4B,6A,6B1, -இல்
குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப வரைபடம்.

(திட்டமில்லாத பகு

இணையதள விண்ணப்ப எண்: AM90VHV0

அளவு :1:400

**குறிப்புகள்:**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | |
| மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட | - | 10974.60ச.மீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 21238.44ச.மீ |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | - | |
| நிலையிலுள்ள சாலை | - | |
| மனைப்பிரிவு உத்தேச சாலை | - | |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | - | 212 எண்ணம் |
| ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை | - | 212 எண்ணம் |
| மனுதாரர் உபயோகம் | - | 01 எண்ணம் |

ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| சாதாரண வகை மனைகள் (மனை எண்களா:1,33-52,59-212.) | – 174 எண்ணம் |
| குறைந்த வருவாய் பிரிவினர் மனைகள்(EWS) (மனை எண்களா:2-32,53-58.) | – 38 எண்ணம் 2236.96ச.மீ (10.53%) |
| | 212 எண்ணம் |

**பொது ஒதுக்கீடு:** (உள்ளாட்சிக்கு தானமாக ஓப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.)

பூங்கா= பூங்கா 1+ பூங்கா 2
1622.80ச.மீ + 583.69ச.மீ = 2206.49ச.மீ (10.38%)
ஆவண எண்:- 3091/2024 (நாள்:05.06.2024)

உள்ளாட்சி உபயோகத்திற்கு = 141.58ச.மீ (0.66%)
ஆவண எண்:- 3091/2024 (நாள்:05.06.2024)

தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்கு = 117.185ச.மீ (0.55%)
ஆவண எண்:- 3092/2024 (நாள்:05.06.2024)

**மூலை முடக்கு**

12.00மீ அகலச்சாலைகள் வரை 1.50மீ X 1.50மீ விடப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண்-71 ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி துறை நாள்-16.09.2003-இன் படி மனுதாரரது நிலஉரிமம் குறித்து சரிபார்ப்பது உள்ளாட்சியின் பொறுப்பாகும்.
2. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்:-04.02.2019-ன் படி, உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
3. அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்:-04.02.2019-ன் படி, உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில் (கிரையப் பத்திரம் - குத்தகை பத்திரம் -பட்டா - தானப்பத்திரம் - பொது அதிகார ஆவணம் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்பட்டுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 1.80மீ x 1.20மீ - அளவிலான நிரந்திர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. ஓடையின் நீர்வழிப்பாதையில் கழிவுநீர் ஏதும் கலக்கக்கூடாது.
11. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லதக்கது அல்ல.
12. இம்மனைப்பிரிவில் இருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு இம்மனைப்பிரிவில் இருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட கூடாது. கட்டப்பட்டு இருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.

**குறிப்பு :**

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ / ந.ஊ.து.இ.(விருமா)எண்: 71/ 2024

Signature Not Verified
Signed by Deputy Director
Location: Virudhunagar
Date:2024.06.10 19:0?:30

அளவர் \ உத வரைவாளர்  வரைவாளர் நிலை-III  மேற்பார்வையாளர்  உதவி இயக்குநர்

துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்